இந்திய அரசு

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

# 1993 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையச் சட்டம்

(சட்ட எண் 27/1993)

(2001, டிசம்பர் 31 அன்று இருந்தவாறு)

# The National Commission for Backward Classes Act, 1993

(Act No. 27 of 1993)

(As on the 31st December, 2001)

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

சட்ட (ஆட்சிமொழிப் பிரிவு)த் துறை,

தலைமைச் செயலகம்

சென்னை-9

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத் துறை சிறப்பு ஆணையர்
மற்றும் ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
2006

PRICE : Rs. 21.00

# 1993 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையச் சட்டம்

(சட்ட எண் 27/1993)

# The National Commission for Backward Classes Act, 1993

(Act No. 27 of 1993)

# PREFACE

This edition of the National Commission for Backward Classes Act, 1993 (Act No. 27 of 1993) as on the 31st December 2001, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the *Gazette of India*, Extraordinary, Part XV, Section 1, Vol. I-dated 10th February, 2004 on pages from 6 to 11.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of the section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it became the Authoritative Texts of the Act in Tamil.

New Delhi,
10th February, 2004.

(Signed)..........,
*Secretary to Government of India.*

# முன்னுரை

2001, டிசம்பர் 31 ஆம் தேதியிலிருந்தவாறுள்ள 1993 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையச் சட்டம் (சட்ட எண் 27/1993)-இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது. இது, 2004, பிப்ரவரி 10 ஆம் தேதியிடப்பட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி XV, பிரிவு I, தொகுதி I இன் 6 முதல் 11 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ்மொழிப்பெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது. அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புதுதில்லி,
10 பிப்ரவரி, 2004.

(ஒப்பம்)...........,
இந்திய அரசாங்கச் செயலாளர்.

# 1993 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையச் சட்டம்

(சட்ட எண் 27/1993)

பொருளடக்கம்

## அத்தியாயம் I

### முன்னுரை


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம். | 1 |
| 2. | பொருள்வரையறைகள். | 1 |


## அத்தியாயம் II

### பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையம்


| | | |
|---|---|---|
| 3. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையத்தை அமைத்தல். | 2 |
| 4. | தலைமையரின் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலமும் பணிவரைக்கட்டுகளும். | 2 |
| 5. | ஆணையத்தின் அலுவலர்களும் பிற பணிபுரிவோரும். | 3 |
| 6. | மானியங்களில் இருந்து வழங்கப்படவேண்டிய வரையூதியங்களும் படித்தொகைகளும். | 3 |
| 7. | காலியிடங்கள் முதலியன ஆணையத்தின் நடவடிக்கைகளைச் செல்லுந்தன்மையற்றதாக்காது. | 3 |
| 8. | ஆணையத்தினால் ஒழுங்குபடுத்தப்படவேண்டிய நெறிமுறை. | 3 |


## அத்தியாயம் III

### ஆணையத்தின் செயற்பணிகளும் அதிகாரங்களும்


| | | |
|---|---|---|
| 9. | ஆணையத்தின் செயற்பணிகள். | 3 |
| 10. | ஆணையத்தின் அதிகாரங்கள். | 3 |
| 11. | பட்டியல்களில் மைய அரசால் செய்யப்படும் காலமுறை திருத்தமைவுகள். | 4 |


## அத்தியாயம் IV

### நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை


| | | |
|---|---|---|
| 12. | மைய அரசால் அளிக்கப்படும் மானியங்கள். | 4 |
| 13. | கணக்குகளும் தணிக்கையும். | 4 |
| 14. | ஆண்டறிக்கை. | 5 |
| 15. | ஆண்டறிக்கையும் தணிக்கையறிக்கையும் நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்படுதல் வேண்டும். | 5 |

## அத்தியாயம் V

### பல்வகை


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 16. | ஆணையத்தின் தலைமையர், உறுப்பினர்கள், பணிபுரிவோர் ஆகியோர் அரசுப்பணியாளர்கள் ஆவர். | 5 |
| 17. | விதிகளை வகுப்பதற்கான அதிகாரம். | 5 |
| 18. | இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம். | 6 |
| 19. | நீக்கறவும் காப்புரையும். | 6 |

# 1993 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையச் சட்டம்

## (சட்ட எண் 27/1993)

[1993, ஏப்ரல் 2]

பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் அல்லாத பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையம் ஒன்றை அமைப்பதற்கும், அத்துடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்கு வகைசெய்வதற்குமான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் நாற்பத்து நான்காம் ஆண்டில் நாடாளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

## அத்தியாயம் I

### முன்னுரை

1. (1) இந்தச் சட்டம், 1993 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையச் சட்டம் என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, 1993 பிப்ரவரி முதல் நாளன்று செல்லாற்றல் பெற்றிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,— பொருள் வரையறைகள்.

(அ) “பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள்” என்பது, மைய அரசால் பட்டியல்களில் குறித்துரைக்கப்படலாகும் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் அல்லாத பிற பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்கள் என்று பொருள்படும்;

(ஆ) “ஆணையம்” என்பது, 3 ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையம் என்று பொருள்படும்;

(இ) “பட்டியல்கள்” என்பது, எந்தப் பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்கள் இந்திய அரசின் மற்றும் இந்திய ஆட்சி நிலவரைக்குள் உள்ள அல்லது இந்திய அரசின் கட்டாள்கையின் கீழுள்ள உள்ளாட்சி அல்லது பிற அதிகார அமைப்பு எதனின் பணியங்களில் போதிய அளவிற்கு இடம் பெறவில்லை என்று அந்த அரசு கருதுகிறதோ அந்தப் பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்களின் நலச் சார்பாகப் பதவியமர்த்தங்களை அல்லது பணியடைகளை ஒதுக்கீடு செய்வதற்கு வகைசெய்யும் நோக்கங்களுக்காக, இந்திய அரசால் அவ்வப்போது தயாரிக்கப்படும் பட்டியல்கள் என்று பொருள்படும்;

(ஈ) “உறுப்பினர்” என்பது, ஆணையத்தின் உறுப்பினர் ஒருவர் என்று பொருள்படும்; மற்றும் தலைமையரையும் உள்ளடக்கும்;

(உ) “வகுத்துரைக்கப்பட்ட” என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளினால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்.

## அத்தியாயம் II

## பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையம்

3. (1) மைய அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையம் என்று அழைக்கப்படலாகும் குழுமம் ஒன்றை அமைக்கும். அது, இந்தச் சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தும், மற்றும் அதற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள செயற்பணிகளைப் புரியும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான தேசிய ஆணையத்தை அமைத்தல்.

(2) ஆணையம், மைய அரசால் நியமனம் செய்யப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்:—

(அ) உச்சநீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றம் ஒன்றின் நீதிபதியாக இருக்கிற அல்லது இருந்துவந்திருக்கிற தலைமையர்;

(ஆ) சமூக அறிவியலாளர் ஒருவர்;

(இ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தொடர்பான பொருட்பாடுகளில் சிறந்த தனியறிவினை உடைய இருவர்; மற்றும்

(ஈ) இந்திய அரசின் செயலர் படிநிலையில் மைய அரசில் ஓர் அலுவலராக இருக்கிற அல்லது இருந்துவந்திருக்கிற உறுப்பினர்-செயலர்.

4. (1) உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் பதவியேற்கும் தேதியில் இருந்து மூன்றாண்டு கால அளவிற்குப் பதவி வகிப்பர். தலைமையரின் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலமும் பணிவரைக் கட்டுகளும்.

(2) உறுப்பினர் ஒருவர், மைய அரசுக்குத் தம் கையொப்பமிட்டு எழுத்துவழித் தெரிவித்து, தலைமையர் அல்லது, நேர்வுக்கேற்ப, உறுப்பினர் பதவியில் இருந்து எந்த நேரத்திலும் பதவியை விட்டு விலகலாம்.

(3) மைய அரசு, அந்த நபர்,—

(அ) விடுவிப்புப்பெறாத நொடிப்புநிலையராக ஆகிவிடுவாராயின்,

(ஆ) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கியதென்று மைய அரசு கருதும் குற்றச்செயல் ஒன்றிற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருப்பாராயின்,

(இ) பித்துப்பிடித்தவராகி விடுவாராயின், மற்றும் தகுதிறம் வாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் அவ்வாறு விளம்பப்படுவாராயின்,

(ஈ) செயல்பட மறுப்பாராயின் அல்லது செயற்படுவதற்குத் திறனற்றவராகி விடுவாராயின்,

(உ) ஆணையத்திடம் வாராமைவிடுப்பு பெறாமல், ஆணையத்தின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வாராதிருப்பாராயின், அல்லது

(ஊ) அந்த நபர் பதவியில் தொடர்ந்திருப்பது பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் அல்லது பொதுமக்களின் நலனுக்கு கேடு விளைவிக்கும் என்று மைய அரசு கருதும் வண்ணம், அவர், தலைமையர் அல்லது உறுப்பினர் பதவியை அவ்வாறு தவறாகப் பயன்படுத்தியிருப்பாராயின்,

அவரை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குதல் வேண்டும்:

**வரம்புரையாக:** நபர் எவரும், இந்தப் பொருட்பாடு பற்றி கேட்கப்படுவதற்கு அந்த நபருக்கு வாய்ப்பொன்று அளிக்கப்படும் வரையிலும், இந்தக் கூறின்படி நீக்கப்படுதல் ஆகாது.

(4) (2)ஆம் உட்பிரிவின்படியோ பிறவாறாகவோ ஏற்பட்ட காலியிடம் ஒன்று, புதிய நியமனத்தின் வாயிலாக நிரப்பப்படுதல் வேண்டும்.

5. (1) மைய அரசு, ஆணையம், அதன் செயற்பணிகளைத் திறம்பட புரிவதற்குத் தேவைப்படலாகும் அலுவலர்களுக்கும் பணிபுரிவோருக்கும், ஆணையத்திற்கு வகை செய்தல் வேண்டும். ஆணையத்தின் அலுவலர்களும் பிற பணிபுரிவோரும்.

(2) ஆணையத்திற்கென பணியமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கும் பிற பணிபுரிவோர்க்கும் வழங்கத்தக்க வரையூதியங்களும் படித்தொகைகளும், மற்றும் அவர்களது பணி பற்றிய பிற வரையுரைகளும் வரைக்கட்டுகளும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

6. 5ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள அலுவலர்களுக்கும் பிற பணிபுரிவோருக்கும் வழங்கப்படவேண்டிய வரையூதியங்கள், படித்தொகைகள் மற்றும் ஓய்வூதியங்கள் உள்ளடங்கலாக தலைமையருக்கும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய வரையூதியங்களும் படித்தொகைகளும் நிருவாகச் செலவு மற்றும் 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள மானியங்களில் இருந்து செலுத்தப்படுதல் வேண்டும். மானியங்களில் இருந்து வழங்கப்பட வேண்டிய வரையூதியங்களும் படித்தொகைகளும்.

7. ஆணையத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் ஆணையத்தில் காலியிடம் அல்லது அதன் அமைப்பில் குறைபாடு எதுவும் உள்ள காரணத்தால் மட்டுமே செல்லுந்தன்மையற்றதாகாது. காலியிடங்கள், முதலியன ஆணையத்தின் நடவடிக்கைகளைச் செல்லுந்தன்மையற்றதாக்காது.

8. (1) ஆணையம், தேவைப்படுகிற போதெல்லாம் தலைமையர் பொருத்தமென கருதுகிற நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும். ஆணையத்தினால் ஒழுங்குபடுத்தப்படவேண்டிய நெறிமுறை.

(2) ஆணையம் தன்னுடைய நெறிமுறைகளை ஒழுங்குறுத்துதல் வேண்டும்.

(3) ஆணையத்தின் அனைத்து ஆணைகளும் முடிவுகளும், அதன் செயலுறுப்பினராலோ இதற்கென செயலுறுப்பினரால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆணையத்தின் பிற அலுவலர் எவராலுமோ உறுதிச் சான்றிடப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் III

## ஆணையத்தின் செயற்பணிகளும் அதிகாரங்களும்

9. (1) ஆணையம், குடிமக்களின் பிரிவினர் எவரையும் பட்டியலில் ஒரு பிற்பட்ட வகுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான கோரிக்கையினை ஆராய்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய பட்டியல்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் எவரும் மிகுதியாக சேர்க்கப்பட்டுள்ளனர் அல்லது குறைவாகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது குறித்த குறையீடுகளைக் கேட்டல் வேண்டும், மற்றும் அது முறையானது எனத் தான் கொள்ளலாகிற தேர்வுரையை மைய அரசிற்கு அளித்தல் வேண்டும். ஆணையத்தின் செயற்பணிகள்.

(2) ஆணையத்தின் தேர்வுரையானது வழக்கமாக மைய அரசைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

10. ஆணையம், 9ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்படி அதன் செயற்பணிகளைப் புரிந்து வருகையிலும் குறிப்பாக பின்வரும் பொருட்பாடுகள் பொறுத்தும் உரிமை வழக்கொன்றை விசாரிக்கும் உரிமையியல் நீதிமன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும் உடையதாக இருக்கும், அவையாவன:— ஆணையத்தின் அதிகாரங்கள்.

(அ) இந்தியாவின் எந்தப் பகுதியில் இருந்தும் நபர் எவருக்கும் அழைப்பாணை அனுப்பி அவர்களை வருமாறு செய்வித்தல், மற்றும் ஆணைமொழியின்மீது அவரை விசாரித்தல்;

(ஆ) ஆவணம் எதனையும் வெளிக்கொணர்ந்து முன்னிலைப்படுத்துவதற்கு வேண்டுறுத்துதல்;

(இ) ஆணையுறுதி ஆவணத்தின்பேரில் சான்றுகளைப் பெற்றுக் கொள்ளுதல்;

(ஈ) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் பொதுப் பதிவணம் அல்லது அதன்படி எதனையும் வேண்டுறுத்திப் பெறுதல்;

(உ) சாட்சிகளையும் ஆவணங்களையும் ஆராய்வு செய்வதற்காக பணிப்பாணைகளை வழங்குதல்; மற்றும்

(ஊ) வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

பட்டியல்களில் மைய அரசால் செய்யப்படும் காலமுறை திருத்தமைவுகள்.

11. (1) மைய அரசு, எந்த வகுப்பினர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களாக இருப்பது அற்றுப் போயிருக்கிறதோ அந்தப் பிரிவினர்களை அத்தகையப் பட்டியலில் இருந்து நீக்கும் நோக்கத்துடன் அல்லது புதிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களை அத்தகைய பட்டியல்களில் சேர்த்துக்கொள்வதற்காக, எந்த நேரத்திலும் திருத்தியமைக்கலாம் மற்றும் இந்தச் சட்டம் செல்லாற்றல் பெற்றதிலிருந்து பத்தாண்டுகள் கழிவுறுகையில் மற்றும் அதன்பின்பு அடுத்துவரும் ஒவ்வொரு பத்தாண்டு கழிவுறுகையிலும் திருத்தியமைத்தல் வேண்டும்.

(2) மைய அரசு, (1)ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள திருத்தமைவு எதனையும் மேற்கொள்ளுங்கால், ஆணையத்தைக் கலந்தாய்வு செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் IV

## நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை

மைய அரசால் அளிக்கப்படும் மானியங்கள்.

12. (1) மைய அரசு, இதற்கென நாடாளுமன்றத்தினால் உரிய பண ஒதுக்களிப்பு செய்யப்பட்டதன் பின்பு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதற்குப் பொருத்தமென மைய அரசு கருதலாகும் பணத்தொகைகளை மானியங்கள் என்ற வகையில் ஆணையத்திற்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஆணையம், இந்தச் சட்டத்தின்படியான செயற்பணிகளைப் புரிவதற்காக அது பொருத்தமெனக் கருதுகிற தொகைகளைச் செலவிடலாம், மற்றும் அத்தகைய தொகைகள், (1)ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள மானியங்களில் இருந்து வழங்கத்தக்க செலவினமாகப் பாவிக்கப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் தணிக்கையும்.

13. (1) ஆணையம், முறையான கணக்குகளையும் பிற தொடர்புற்ற பதிவணங்களையும் பேணிவருதல் வேண்டும், மற்றும், மைய அரசு இந்தியக் கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையருடன் கலந்தாய்வு செய்து வகுத்துரைக்கலாகும் படிவத்தில் கணக்குகளுக்கான ஆண்டறிக்கை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) ஆணையத்தின் கணக்குகள், இந்தியக் கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையாளரால், அவரால் குறித்துரைக்கப்படலாகும் கால இடைவெளிகளின்போது தணிக்கை செய்யப்படுதல் வேண்டும், மற்றும் அத்தகைய தணிக்கை தொடர்பாக ஏற்பட்ட செலவினம் எதுவும், கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையருக்கு ஆணையத்தினால் வழங்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

(3) கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையர் அல்லது இந்தச் சட்டத்தின்படி ஆணையத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர்பாக அவரால் பணியமர்த்தப்பட்ட நபர் எவரும், அரசுக் கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர்பாக, கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையாளர், பொதுவாகப் பெற்றிருக்கும் உரிமைகளையும் மதிப்புரிமைகளையும் மற்றும் அதிகார அடைவினையும் உடையவராக இருப்பார் மற்றும் குறிப்பாக புத்தகங்கள், கணக்குகள், தொடர்புடைய செலவுச் சீட்டுகள் மற்றும் பிற ஆவணங்களையும் ஏடுகளையும் கோருவதற்கும் மற்றும் ஆணைய அலுவலகங்கள் எவற்றையும் சோதனையிடுவதற்குமான உரிமையினையும் உடையவராக இருப்பார்.

14. ஆணையம், வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும் காலத்தின் போதும் முந்திய நிதியாண்டின்போதான அதன் செயற்பாடுகளின் முழு விவரத்தையும் அளிக்கிற அந்த நிதியாண்டிற்கான அதன் ஆண்டறிக்கையைத் தயாரித்தல் வேண்டும் மற்றும் மைய அரசிற்கு அதன் படியொன்றை மேலனுப்புதல் வேண்டும். ஆண்டறிக்கை.

15. மைய அரசு, 9ஆம் பிரிவின்படி ஆணையத்தினால் அளிக்கப்பட்ட தேர்வுரையின்பேரில் எடுக்கப்பட்ட, நடவடிக்கைக்கான விவரக்குறிப்பொன்றுடன் மற்றும் அத்தகைய தேர்வுரை எதுவும் ஏற்கப்படாமல் இருப்பின், அதற்கான காரணத்தையும் சேர்த்து, ஆண்டறிக்கையும் தணிக்கையறிக்கையையும், அவை பெறப்பட்ட பின்பு, கூடியவிரைவில், நாடாளுமன்றத்தின் அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுமாறு செய்வித்தல் வேண்டும். ஆண்டறிக்கையும் தணிக்கை அறிக்கையும் நாடாளு மன்றத்தின் முன் வைக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் V

## பல்வகை

16. ஆணையத்தின் தலைமையர், உறுப்பினர்கள், பணிபுரிவோர் ஆகியோர், 1860 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின்145/1860 21ஆம் பிரிவின் பொருளின்படி அரசுப் பணியாளர்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆணையத்தின் தலைமையர், உறுப்பினர்கள், பணிபுரிவோர் ஆகியோர் அரசுப் பணியாளர்கள் ஆவர்.

17. (1) மைய அரசு, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக, அரசிதழில் அறிவிக்கை வாயிலாக விதிகளை வகுக்கலாம். விதிகளை வகுப்பதற்கான அதிகாரம்.

(2) குறிப்பாகவும், மேலேகண்ட அதிகாரங்களின், பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும் அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:—

(அ) 4ஆம் பிரிவின் 5ஆம் உட்பிரிவின்படி தலைமையருக்கும் உறுப்பினர்களுக்கும், 5ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி அலுவலர்களுக்கும் பிற பணிபுரிவோருக்கும் வழங்கத்தக்க வரையூதியங்கள் மற்றும் படித்தொகைகள் மற்றும் அவர்களின் பிற பணிவரையுரைகளும் வரைக்கட்டுகளும்,

(ஆ) 13ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி கணக்குகளின் ஆண்டு விவர உரை எந்தப் படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டுமோ அந்தப் படிவம்,

(இ) 14ஆம் பிரிவின்படி ஆண்டறிக்கை எந்தப் படிவத்தில் மற்றும் எந்தக் காலத்தில் தயாரிக்கப்பட வேண்டுமோ அந்தப் படிவமும் காலமும்;

(ஈ) வகுத்துரைக்கப்படுமாறு வேண்டுறுத்தப்படுகிற அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

(3) இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் அது ஒரு கூட்டத்தொடராகவோ, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்தக் கூட்டத்தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்கள் கொண்ட ஒரு காலஅளவிற்கு அமர்வில் இருக்கையில், அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் எதுவும் இல்லாது போகும். எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி அதற்கு முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

18.(1) இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செல்திறப்படுத்துவதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசு, அந்த இடர்ப்பாட்டை அகற்றுவதற்குத் தேவையானதாகவோ உகந்ததாகவோ அதற்குத் தோன்றுகிறதும், அந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு முரணாக இல்லாததுமான வகையங்களை அரசிதழில் வெளியிடப்படும் ஆணையின் வாயிலாகச் செய்யலாம்: இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

**வரம்புரையாக:** அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியில் இருந்து இரண்டாண்டு காலஅளவு கழிவுற்ற பின்பு பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

19. (1) 1993 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணைய அவசரச் சட்டம், அவசரச் சட்டம் 13/1993 ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. நீக்கறவும் காப்புரையும்.

(2) அத்தகைய நீக்கறவு செய்யப்பட்டிருந்தபோதிலும், மேற்கூறப்பட்ட அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டத்தின் நேரிணையான வகையங்களின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.